1986 நவம்பர் 14]

திருப்பத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி கட்டும் திட்டம்

6—(*வினா எண் 9623)—திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி கட்டிடம் துவக்க உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) திருப்பத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி ஏதும் இல்லை. எனவே கட்டிடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல தற்சமயம் அங்கு பிற்பட்டோர் மகளிர் விடுதி எதுவும் இல்லை என்பது சரிதான். ஆனால் அங்கு இருக்கின்ற அரசினர் ஆதிதிராவிட மாணவியர்கள் விடுதியில் பிற்பட்ட மாணவியர்களைச் சேர்க்கும் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகவே பிற்பட்ட மாணவியர்களுடைய வசதியை முன்னிட்டு புதியதாக பிற்பட்ட வகுப்பு மாணவியர்கள் விடுதியை ஏற்படுத்த அரசு உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதியாண்டில் நிதிநிலையைப் பொறுத்து பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதி இரண்டு தொகுதிகளுக்கு மையப் பகுதியாக இருப்பதால் பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்களுக்கு கட்டிட வசதி தேவைப்படுவதால் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வசதி ஏற்படுத்தி அங்கே ஒரு மாணவர் விடுதியை ஏற்படுத்தித் தர அரசு ஆலோசனை செய்யுமா ? ஓராண்டுக்கு எந்தளவிற்கு கட்டிட வசதிகள் செய்து தரப்படுகின்றன ? அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு தகுந்த நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகிற நிதியாண்டில் 9 இடங்களில் புதிய கட்டிடங்களைக் கட்ட அரசு ஆணை பிறப்பித்து கட்டுமானப் பணி நடந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டது போல திருப்பத்தூரின் அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது. அதைப் பற்றி வருகிற நிதியாண்டில் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்று தெரிவித்திருக்கிறேன்.

+2-ல் விருப்பப்பாடமாக தொழிக பயிறசிப் பாடம்

7—(*வினா எண் 649)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) +2 வகுப்புகளில் விருப்பப்பாடங்களுள் தொழிற் பயிற்சிப் பாடத்தையும் கற்பிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மேல்நிலைக் கல்வி பொதுப் பாடம் முதல் பிரிவில், வீட்டு மின் சாதனங்கள், மின்சார மோட்டார்களுக்கு கம்பி சுற்றுதல், பொது இயந்திரவியல், வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டி பராமரித்துப் பழுது பார்த்தல், மின்கணிப்புப் பொறி அறிவியல், வங்கிக் கணக்கியல், மின்னணுவியல், அலுவலக மேலாண்மை, தட்டச்சு மற்றும் பொது இன்சுரன்ஸ் என்னும் தொழிற் பாடங்களில் ஒன்றை போதிக்கும் திட்டத்தை 1986–87 முதல் அமுல் படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தொழிற் பிரிவு பாடங்களைப் பயில்வதற்கு ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் போன்றவற்றிற்குப் போக வேண்டியிருக்கிறது. அங்கே குறைந்த சீட்டுகளே இருப்பதால் எல்லா மாணவர்களுக்கும் தொழிற் பிரிவு கல்வியைப் பயில்வதற்கு வாய்ப்பு கிட்டுவதில்லை. ஐ.டி.ஐ. யைப் போல பிட்டர், டர்னர் போன்ற பாடங்களை எல்லா மேல்நிலைப் பள்ளிகளிலும் கற்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.